முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**எம்.சி.ஓ.பி. 7/2024**

**நாள்.12.03.2026**

ம.சா.1 திருமதி.ஹரிணி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

2 , 5 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு திருமணமாகி 19ம் நாளில் விபத்து ஏற்பட்டு கணவர் இறந்துவிட்டார் என்றால் இல்லை, 31வது நாள்தான் விபத்து ஏற்பட்டது. எங்கள் திருமணத்திற்கு முன்னர் 1, 2ம் எதிர்மனுதாரர் தங்கள் குழந்தைகளுடன் கூட்டுக்குடும்பமாக இருந்தனர் என்றால் சரிதான். 6ம் எதிர்மனுதாரர் பிறந்தது முதல் கேட்கும் மற்றும் பேச்சுத்திறன் இல்லாதவர் என்றால் சரிதான். அவரையும் 2ம் எதிர்மனுதாரர்தான் தற்போது பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கூட்டுக்குடும்பமாக இருந்தபோது, இறந்த என் கணவர் வீடு ஒன்று கட்டினார் என்றால் சரிதான். அவ்வாறு வீடு கட்டுவதற்கு State Bank of India-ல் கடன் வாங்கி திருமணத்திற்கே முன்பே வீடு கட்டியிருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு கடன் வாங்குவதற்கு 1ம் எதிர்மனுதாரர் ஜாமின்தாரராக இருந்தார் என்றால் சரிதான். என் கணவர் இறந்ததற்காக பணிகொடையாக ரூ.20,00,000/- வந்தது என்றால் இல்லை. ரூ.25,00,000/- கொடுத்தார்கள். அதில் 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.10,00,000/- கிடைத்தது என்றாலும், அந்த தொகை முழுவதையும் வீட்டுகடனுக்காக கழித்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். மீதம் ரூ.10,00,000/- எனக்கு பணம் வந்தது என்றால் சரிதான். எனக்கு வந்த அந்த ரூ.10,00,000/-யில் நான் வீட்டுக்கடனிற்காக எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

இறந்துபோன என் கணவரின் பெற்றோர்கள் மற்றும் 6ம் எதிர்மனுதாரர் முழுவதுமாக என் கணவரின் பராமரிப்பிலும், பாதுகாப்பிலும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:54:52 +0530

இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் இழப்பீட்டு தொகையில் அவர்களுக்கு அதிகமாக பங்கு கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.12 16:54:57 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .